DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC. 139 of 2016

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 1

Name : திரு.வெள்ளிங்கிரி

Age : 38

Father's/Husband's Name : ராமன்

Village : கூகலூர்

Taluk : கோபிசெட்டிப்பாளையம்

Caste :

Calling : கட்டிடவேலை

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of November 2018

முதல் விசாரணை: நாள்.20.11.2018

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கட்டிடவேலைக்கு சென்று வருகிறேன். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு திருப்பூர்-பல்லடம் வரும் வழியில் இடம் ஞாபகம் இல்லை, என் தம்பி சண்முகத்திற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். விபத்து சம்பவம் கேள்விபட்டு திருப்பூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அவர் இறந்துபோய்விட்டார். பின்னிட்டு பல்லடம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரை எனது தம்பி சரவணன் எழுதினார், அதில் நான் கைரேகை வைத்து கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1., போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்தார்கள்.

கு.வி.

போலீஸ் விசாரணையில் புகாரை எனது தம்பி சரவணன் எழுதினார் என்று சொல்லியுள்ளேன். புகார் படித்து காண்பிக்கப்பட்ட பிறகுதான் நான் ரேகை வைத்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். காவல்நிலையத்தில் வைத்துதான் புகாரில் உள்ள கைரேகையை வைத்தேன். ஏற்கனவே காவல்நிலையத்தில் தயார் செய்த புகாரில்தான் கைரேகை வைத்தேன் என்றால் சரிதான்.

sd/வெள்ளிங்கிரி

Take down by me in open court read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct

Judicial Magistrate,
Palladam.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC. 139 of 2016

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 2

| | |
|---|---|
| Name | : திரு.வேலுச்சாமி |
| Age | : 42 |
| Father's/Husband's Name | : ராமன் |
| Village | : கூகலூர் |
| Taluk | : கோபிசெட்டிப்பாளையம் |
| Caste | : |
| Calling | : கட்டிடவேலை |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of November 2018

முதல் விசாரணை: நாள்.20.11.2018

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கட்டிடவேலைக்கு சென்று வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பு பைப்லைன் வேலை சம்பந்தமாக குழிதோண்டுவதற்காக நானும், என்னுடைய இரண்டு தம்பிகளும் வந்திருந்தோம். என்னுடைய தம்பி சண்முகம் இருசக்கர வாகனத்தில் சாலையை கடக்க சாலையின் தடுப்பு அருகே வந்து நின்றபோது அந்த வழியாக வந்த வேன் ஒன்று என் தம்பி வாகனத்தின் மீது மோதி என் தம்பிக்கு தலையில் அடிபட்டுவிட்டது. அடிபட்ட என் தம்பியை திருப்பூர் அரசு மருத்துமனைக்கு தூக்கிசென்றோம். அங்கு என் தம்பி இறந்துவிட்டதாக சொன்னார்கள். இதுகுறித்து என் தம்பி வெள்ளிங்கிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்தார்கள்.

கு.வி.

என் தம்பி சண்முகம் வாகனம் வருவதை கவனிக்காமல் திடீரென ரோட்டை கடந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் அவர் ரோட்டை கடக்கும்போது நடுரோட்டில் தடுப்புக்கு அருகில் நின்றுவிட்டார். நான் சம்பவ இடத்திற்கு கால் மணி நேரம் கழித்து வந்தேன். என்னுடன் வேலைக்கு வந்த வேலுச்சாமி மற்றும் பாலசுப்பிரமணியம், பழனிச்சாமி ஆகியோர் சம்பவம் கேள்விபட்டு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் ஆமாம். புகாரினை காவல்நிலையம் சென்று நாங்கள் எழுதிகொடுத்தோம். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் காவல்துறையினர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

sd/வேலுச்சாமி

Take down by me in open court read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct

Judicial Magistrate,
Palladam.